2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

இங்கே பாருங்கள். அந்தப் பிரச்சினைகளுக்கு நான் முற்றுப்புள்ளி வைத்து, விவாதத்தை இதோடு முடித்துவிட்டேன்.

இப்பொழுது நேரத்தின் அருமை கருதி, நான் அரசின் சார்பாக வருகிற தனித் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். ஆகவே, அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

4. அரசினர் தனித் தீர்மானம்

காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் நீதிமன்ற வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் காவேரிப் படுகையில் எந்தத் திட்டத்தையும் மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது என மத்திய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவாணி நதி, அட்டப்பாடி பள்ளத்தாக்கில், கேரள மாநிலத்தில் உற்பத்தியாகி அம்மாநிலத்திற்குள்ளேயே ஓடி, பவானி ஆற்றுடன் கேரள எல்லைக்குள்ளேயே சேருகின்ற ஒரு நதி ஆகும். இந்த ஆறு, பன்மாநில நதியான காவேரி நதியின் துணை உப நதியாகும்.

காவேரி நடுவர் மன்றத்தில், கேரள அரசு, பவானி படுகையில், 27 டி.எம்.சி. அடி நீர் ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் கோரியது. அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைக்காக 4.5 டி.எம்.சி. அடி நீர் ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் கோரியது. காவேரி நடுவர் மன்றம், அதன் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில், கேரள பவானி படுகைக்கென மொத்தம் 6 டி.எம்.சி. அடி நீரை ஒதுக்கீடு செய்தது. இதில், அட்டப்பாடி பாசன உபயோகத்திற்காக 2.87 டி.எம்.சி. அடி நீர் ஒதுக்கீடு செய்தது.

காவேரி நடுவர் மன்ற ஆணையை எதிர்த்து கர்நாடகா மற்றும் கேரள அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்களை 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தாக்கல் செய்தன.

[செல்வி ஜெ ஜெயலலிதா][2016 செப்டம்பர் 2

1956 ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர்த் தாவாச் சட்டம், பிரிவு 5(3)–ன்கீழ் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்மீது தமிழ்நாடு அரசு விளக்கங்கள் கோரும் மனுவினை காவேரி நடுவர் மன்றத்தில் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தாக்கல் செய்தது. பின்னர், 5–5–2007–ல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவையும் தாக்கல் செய்தது. இவ்விரு மனுக்களிலும் இரண்டாவது போக பாசனப் பரப்பையும் மற்றும் அதற்குரிய நீரை ஒதுக்கீடு செய்ததையும் மறுபரிசீலனை (குறுக்கீடு) செய்து, தொன்றுதொட்டு பாசனம் மேற்கொண்டு வரும் பகுதிகளில் இரண்டாம் போக நன்செய் பயிரை அனுமதித்து அதற்குரிய நீரை தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென்றும், கர்நாடகாவிற்கும், கேரளாவிற்கும் பாசனம் செய்வதற்காக பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நீர்த் தேவையைக் குறைக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. அதே தருணத்தில், 1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பாசனப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த இரண்டாம் போக பாசனப் பரப்பை அனுமதித்து அதற்குரிய நீரை ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–50

ஜூன் 2012–ல் அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்காக கேரள அரசு அணை ஒன்று கட்டுவதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறது என ஊடகங்களில் செய்திகள் வந்ததையடுத்து, நான் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு 21–6–2012 ஆம் நாளிட்டு அனுப்பிய கடிதத்தில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்மீது உச்ச நீதிமன்றத்தில், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் விளக்கங்கள் கோரும் மனுக்கள் நிலுவையில் உள்ள நிலையில், அந்த இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரையிலும், நீதிமன்ற உத்தரவுகள் வரும் வரையிலும், கேரள அரசு காத்திருந்து அவற்றில் முடிவு தெரியும் வரையில் எந்த ஒரு திட்டத்தையும் எடுத்துக்கொள்ளக் கூடாது எனத் தெரிவித்து, பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, கேரள அரசு கட்ட உத்தேசித்துள்ள அட்டப்பாடி பாசனத் திட்டம் அல்லது வேறு எந்த ஒரு திட்டத்தையும் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணான வகையில் கட்ட வேண்டாம் என கேரள அரசுக்கு அறிவுரை வழங்கும்படி கேட்டுக்கொண்டேன்.

2016 செப்டம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மேலும், மத்திய நீர் வளக் குழுமம் கேரள அரசின் அணை கட்டும் திட்டத்திற்கு எந்த ஒரு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கக்கூடாது எனவும் அறிவுறுத்தும்படி கேட்டுக்கொண்டேன்.

இதனைத் தொடர்ந்து, மத்திய நீர் ஆதார அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் மற்றும் கேரள அரசு ஆகியவற்றிற்கு தமிழக அரசின் சார்பில் கடிதங்கள் அனுப்பப்பட்டு வந்தன.

மத்திய நீர் ஆதார அமைச்சகம் அதன் *19–9–2013* ஆம் நாளிட்ட கடிதத்தில், அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கு உபயோகிக்கப்பட உள்ள நீர் குறித்து சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவினைப் பெற்ற பின்னர், காவேரி நடுவர் மன்றத்தின் இசைவைப் பெறும்படி கேரள அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கேரள அரசு, தன்னிச்சையாக அட்டப்பாடி பள்ளத்தாக்குத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு மேற்கொள்வதற்காக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவிடம், Expert Appraisal Committee–இடம் நிலையான ஆய்வு வரம்புகளை, Standard Terms of Reference–ஐ அளிக்க கேட்டுக்கொண்டது. கடந்த மார்ச் *28* மற்றும் *29* ஆம் தேதிகளில் நடைபெற்ற *92*–வது கூட்டத்தில் கேரள அரசின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இக்குழு தமிழ்நாடு அரசின் கருத்தினைப் பெறுமாறும், தமிழ்நாடு அரசு அதன் கருத்தினை அளித்த பின்தான் கேரள அரசின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என முடிவு எடுத்தது. தமிழ்நாடு அரசுக்கு *10–5–2016* அன்று கிடைக்கப்பெற்ற கேரள அரசின் கடிதம் பரிசீலனையில் இருந்தபோதே, கேரள அரசு தமிழ்நாடு அரசின் கருத்தினைப் பெறாமலேயே தன்னிச்சையாக இத்திட்டத்திற்கான பரிந்துரைக்காக மீண்டும் வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவினை அணுகியது. கடந்த ஆகஸ்ட் மாதம் *11* மற்றும் *12* ஆம் தேதிகளில் நடைபெற்ற *96*–வது கூட்டத்தில் ஒரு பொருள் நிரலாக Agenda Item ஆக சேர்க்கப்படாமல், ஒரு கூடுதல் பொருள் நிரலாக Additional Agenda Item ஆக இது பரிசீலிக்கப்பட்டு, கேரள அரசு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு செய்வதற்கான, நிலையான ஆய்வு வரம்புகளை வழங்க பரிந்துரை செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

[செல்வி ஜெ ஜெயலலிதா][2016 செப்டம்பர் 2

இந்நிலையில், இக்குழு தமிழ்நாட்டின் கருத்தினைப் பெறாமல் முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்தும், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து தமிழ்நாடு அரசுக்கு இதன் தொடர்பாக கடிதங்கள் ஏதும் வரவில்லை என்பதை எடுத்துரைத்தும், அவ்வாறு கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக இக்குழுவின் நடவடிக்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது உண்மைக்கு மாறானதாகும் என்றும் நான் 27–8–2016 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

பிற்பகல் 12–55

மேலும், இப்பிரச்சினையில் பிரதமர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான நிலையான ஆய்வு வரம்புகள் வழங்குவதற்கு அளித்த பரிந்துரையை உடனடியாக திரும்பப் பெற மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் அதனைச் சார்ந்த முகமைகளுக்கு அறிவுரை வழங்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளேன். காவேரிப் படுகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும், கேரள மற்றும் கர்நாடக அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம் ஆகியன அனுமதி அளிக்கக்கூடாது எனவும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

இதனைத் தொடர்ந்து, எனது உத்தரவின்பேரில், தலைமைச் செயலாளர் அவர்கள் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கும் மற்றும் நீர் ஆதார அமைச்சகத்திற்கும் இதே கருத்துகளை வலியுறுத்தி, 30–8–2016 அன்று கடிதம் அனுப்பியுள்ளார். மேலும், தலைமைச் செயலாளர் அவர்கள் 30–8–2016 அன்று கேரள அரசின் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், உத்தேசித்துள்ள இந்த ஆய்வினை மேற்கொள்ளக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்தியும் மற்றும் எந்தவொரு அணை கட்டும் பணியையோ அல்லது திட்டத்தையோ காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி

2016 செப்டம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல்முறையீட்டு வழக்குகள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் உள்ள விளக்கங்கள் கோரும் மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும், கேரள அரசு மேற்கொள்ளக் கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 96–வது கூட்டத்தில் அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கு நிலையான ஆய்வு வரம்புகள் வழங்க அளித்த பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும், காவேரிப் படுகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது எனவும் மத்திய அரசை கேட்டுக்கொள்ள பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீர்மானம்

"சிறுவாணி நதி, அட்டப்பாடி பள்ளத்தாக்கில், கேரள மாநிலத்தில் உற்பத்தியாகி அம்மாநிலத்திற்குள்ளேயே ஓடி, பவானி ஆற்றுடன் கேரள எல்லைக்குள்ளேயே சேருகின்ற ஒரு நதி ஆகும். இந்த ஆறு, பன்மாநில நதியான காவேரி நதியின் துணை உபநதியாகும். எனவேதான், காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையில் சிறுவாணி நதி, பவானி ஆற்றுப்படுகை ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் நீரையும் கணக்கில் கொண்டு மாநிலங்களுக்கிடையே காவேரி நதிநீர் பங்கீட்டு அளவைப் பற்றி குறிப்பிட்டுள்ளது.

பிற்பகல் 1–00

2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்காக கேரள அரசு அணை ஒன்று கட்டுவதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறது என ஊடகங்களில் செய்திகள் வந்ததையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா][2016 செப்டம்பர் 2

21–6–2012 அன்று கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்மீது உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் விளக்கங்கள் கோரும் மனுக்கள் நிலுவையிலுள்ள நிலையில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரையிலும், நீதிமன்ற உத்தரவுகள் வரும் வரையிலும், கேரள அரசு எந்தவொரு திட்டத்தையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என கேரள அரசுக்கு அறிவுரை வழங்கும்படி கேட்டுக்கொண்டதுடன், மத்திய நீர்வளக் குழுமம் எந்தவொரு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து, தமிழக அரசால் இதுகுறித்து மத்திய அரசுக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டன.

19–9–2013 அன்று தமிழ்நாடு அரசுக்கு மத்திய நீர் ஆதார அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவினைப் பெற்ற பின்னர், காவேரி நடுவர் மன்றத்தின் இசைவைப் பெறும்படி கேரள அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது என தெரிவித்தது.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, Expert Appraisal Committee 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற 92–வது கூட்டத்தில், அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு மேற்கொள்வதற்கான நிலையான ஆய்வு வரம்புகளுக்கு, Standard Terms of Reference ஒப்புதல் அளிக்க கேரள அரசு கேட்டுக்கொண்ட கோரிக்கைக்கு தமிழ்நாடு அரசின் கருத்தினைப் பெறுமாறும், தமிழ்நாடு அரசின் கருத்து பெறப்பட்டபின்தான் கேரள அரசின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் எனவும் முடிவெடுத்தது.

இந்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்டு 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடைபெற்ற 96–வது கூட்டத்தில், கேரள அரசின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு செய்வதற்கான நிலையான ஆய்வு வரம்புகளுக்கு அனுமதி அளிக்க மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது.

2016 செப்டம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மத்திய நீராதார அமைச்சகத்தின் 19–9–2013 நாளிட்ட கடிதத்திற்கும், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் மார்ச் மாதம் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற கூட்ட முடிவிற்கும் முரணானதாக இந்தப் பரிந்துரை உள்ளது. மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழு கூடுதல் பொருள் நிரலாக இந்தப் பொருளை எடுத்துக்கொண்டு, அவசர கதியில் ஒப்புதல் வழங்கியுள்ளது வருத்தத்திற்குரியது. இந்த கூட்ட நடவடிக்கைக் குறிப்பில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் தமிழ்நாடு அரசுக்கு பல கடிதங்கள் அனுப்பியும், தமிழ்நாடு அரசின் பதில் கிடைக்கப் பெறவில்லை என உண்மைக்கு மாறாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கு இந்த மாமன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டிற்கு எதிராக அவசர கதியில் இந்தக் குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இம்மாமன்றம் கருதுகிறது.

"The EAC took note of no responses from the Tamil Nadu State instead of several letters sent from the Government of Kerala and MoEF & CC to the Government of Tamilnadu. . ." என்று, "inspite of" என்பதற்குப் பதிலாக "instead of" என எழுதப்பட்டிருப்பதே இந்த அவசர கதியை தெரிவிப்பதாக இந்த மாமன்றம் கருதுகிறது.

எனவே, மத்திய நீர் ஆதார அமைச்சகத்தின் 19–9–2013 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் 92–வது கூட்டத்தில் தெரிவித்துள்ளபடியும், தமிழ்நாடு அரசு மற்றும் காவேரி நடுவர் மன்றத்தின் இசைவு பெறாத நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் 96–வது கூட்டத்தில் அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கு நிலையான ஆய்வு வரம்புகள் வழங்குவதற்கான பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது என இந்த மாமன்றம் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா][2016 செப்டம்பர் 2 பிற்பகல் 1–05

மேலும், காவேரிப் படுகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும், மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது எனவும் மத்திய அரசை இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தீர்மானத்தை இம்மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்ற உறுப்பினர்கள் நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாகக் கருத்துகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் காவேரி நதியின் உப நதியான சிறுவாணி நதி நீரை, கேரள அரசின் தவறுகளை வேரறுக்கும்வகையிலும், தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டும்வகையிலும் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்த மாமன்றத்தில் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சிறப்பு மிக்க தீர்மானத்தை மனதார வழிமொழிகின்றேன்.

இந்த நேரத்திலே ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உலகின் பிரம்மாண்டமான நதிகளிலே ஒன்று பிரம்மபுத்திரா. அது திபத்திலே உருவாகி, சீனாவைக் கடந்து, இந்தியாவிலே நுழைந்து, பங்களாதேஷ் நாட்டின் வழியாக வங்கக்கடலில் கலக்கிறது. இந்த நேரத்திலே, இந்தியாவும், ரஷ்யாவும் ஏவுகணை கூட்டுத் தயாரிப்பிலே ஈடுபட்டபோது, அந்தக் கூட்டுத் தயாரிப்பான ஏவுகணைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று ஆய்வு நடந்தது. அந்த நேரத்திலே, தமிழ்நாட்டினுடைய திருமகன், மேதகு அப்துல் கலாம் ஐயா அவர்கள், அந்த ஆலோசனை நடந்த கூட்டத்தில் சொல்கிறார், 'இரண்டு நாடுகளுக்கும் சிறப்பு ஒன்று இருக்கிறது. ஒன்று, ரஷ்யாவின் தலைநகர், மாஸ்கோ நதியின் ஓரமாக இருக்கிறது. மாஸ்கோ நதி என்பது ரஷ்யாவின் சிறப்பு.

2016 செப்டம்பர் 2] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

அதேபோன்று பிரம்மாண்டமாகப் பாய்ந்து எங்கள் நாட்டை வளப்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய பிரம்மபுத்திரா நதி என்பது எங்களுடைய நாட்டின் சிறப்பு. எனவே, மாஸ்கோ என்ற வார்த்தையிலிருந்து ஒரு பகுதியையும், பிரம்மபுத்திரா என்று வார்த்தையிலிருந்து ஒரு பகுதியையும் இணைத்து "பிரமோஸ்" என்று அந்த ஏவுகணைக்குப் பெயர் சூட்டலாம் என்று முடிவெடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் நான் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், அந்த பிரம்மபுத்திரா நதி திபத்திலிருந்து, சீனாவைக் கடந்து, இந்தியாவின் வழியாக பங்களாதேஷ் நாட்டைக் கடந்து வங்கக் கடலிலே கலக்கக்கூடிய நிலையிலே, சீன அரசு பன்னாட்டு விதிகளை மீறி, இந்தியாவிற்குக் கிடைக்கக்கூடிய பிரம்மபுத்திரா நதியின் நீரை கெடுக்கும்வகையில் அவர்கள் ஒரு தடுப்பணையைக் கட்டியபோது, நம்முடைய இந்தியப் பேரரசு என்ன சொன்னது என்று சொன்னால், நம்முடைய இந்தியத் திருநாட்டிற்கு வரக்கூடிய பிரம்மபுத்திரா நதியின் நீரைத் தடுக்காதீர்கள் என்று சீனாவை எச்சரித்தது. இன்று தமிழ்நாட்டை அண்டை மாநிலங்கள் நதி நீரிலே வஞ்சிக்கக்கூடிய நிலையிலே, நீங்கள் நேர்மையாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமா? என்று இந்த நேரத்திலே நான் மனம் திறந்து கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றாகப் பார்த்துப் பேசுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். உள்நாட்டு விவகாரத்திலே, அதுவும் தென்னாட்டு விவகாரத்திலே, எங்கள் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் பிறந்த, நமது முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ்நாட்டின் விவகாரத்திலே, தண்ணீரிலே வஞ்சகம் செய்யலாமா? தண்ணீர் விவகாரத்தில் ஏமாற்ற முனையலாமா? அதை ஒரு காலத்திலும் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது.

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேரளத்தைச் சேர்ந்த அதிகாரிகள் டில்லியிலே, ஆதிக்க அவைகளிலே பெரிய அளவிலே lobbying செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக முடிவெடுக்கும் போக்கை நடுவண் அரசு எடுப்பது என்ன நியாயம்? என்று கேட்கிறேன்.

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2016 செப்டம்பர் 2

உடம்பிலே கொழுப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, சிறிதாக இருக்கக்கூடிய மூளையைவிட கொழுப்பு சிறந்தது என்று யாரும் முடிவெடுத்துவிட முடியாது. இதைப் புரிய வேண்டியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நேரத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அவரின் உணர்வுகளை வெளிப்படுத்தும்விதமாக, நடுவண் அரசுக்கு ஓர் அருமையான தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்ய இருக்கிறேன். 'காற்றுள்ள பந்து தண்ணீரில் மூழ்காது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு இந்த விஷயத்திலே ஒரு காலத்திலும் தோற்காது' என்று கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் தமிழர்கள். 'Sare Jahan se Accha Hindustan hamara' என்று கவிஞர் Allama Muhamed Iqbal அவர்கள் தேசிய ஒருமைப்பாடு குறித்து பாடினார்கள். அதை பாரதியார் அவர்கள் தமிழிலே மொழி பெயர்த்தார்கள். 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்று சொன்னார்கள். இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டை, பண்பாட்டைக் கட்டிக்காக்கும்வகையிலே, நதிநீர் விஷயத்திலே, தமிழ்நாட்டிற்கு நீதி மறுக்கக்கூடாது என்று சொல்லி, நாம் இந்தியர்கள், நாம் தமிழர்கள், அதேநேரத்தில் நம்மை கடலிலே மிதக்கும் வெறும் கட்டுமரங்களாக யாரும் நினைத்துவிடக் கூடாது. உரிமையைப் பெற, நீதியைக் காக்க, நமது முதல்வர் அம்மாவின் தலைமையிலே அலைகடலை கிழித்துச் செல்லும் போர்ப்படை கப்பலாக மாறுவோம். அதில் புறப்படத் தயாராக இருங்கள் என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்று, வழிமொழிந்து அமர்கின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முன்மொழியப்பெற்றிருக்கிற அரசினர் தனித்

2016 செப்டம்பர் 2] [திரு. உ. தனியரசு]

தீர்மானம், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற தீர்மானம். நியாயத்தின் அடிப்படையிலும், உரிமையின் அடிப்படையிலும் அவசியமான தீர்மானம். சிறுவாணி நதியின் குறுக்கே, அட்டப்பாடியில் தடுப்பணை கட்ட 2012–ல் கேரள அரசு முனைகிறது என்கின்ற செய்தியை ஊடகத்தின் வழியாகத் தெரிந்து, அதைத் தடுத்து நிறுத்திட, சம்பந்தப்பட்ட மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அன்றே கடிதம் எழுதி, தமிழ்நாட்டின் ஆற்று நீர் உரிமையைக் காத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முடியளவும், கடுகளவும், ஒரு நொடியும் தயங்கியது கிடையாது என்பதை அப்போதே கடிதத்தின் வாயிலாக உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகஸ்ட் 2016–ல் சம்பந்தப்பட்ட மதிப்பீட்டுக் குழு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு வரம்புக்கு அனுமதி அளிக்கும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்தது, முந்தைய மதிப்பீட்டுக் குழுவின் முடிவுக்கு முரணாக உள்ளது. தமிழ்நாடு அரசினுடைய கருத்தை அறியாமல், நாங்கள் அதற்கு அனுமதி தரமாட்டோம் என்று சொல்லிய பிறகும்கூட அதற்கு முரணாக, மீண்டும் 2016–ல் இப்போது அதே மதிப்பீட்டுக் குழு சம்பந்தப்பட்ட துறை அமைச்சகத்திற்கு அனுமதி வழங்கலாம் என்கின்ற இந்தப் பரிந்துரை, தமிழகத்திற்கு எதிராகச் செய்யப்பட்டிருக்கின்ற துரோக அனுமதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தின் வழியாக தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சரியான நேரத்தில் தமிழ்நாட்டு மக்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்துள்ளார்கள். ஏற்கெனவே, காவேரியை மீட்டுத் தந்து, முடங்கிக் கிடந்த அந்தக் காவேரியினுடைய இறுதித் தீர்ப்பை, மத்திய அரசிதழிலே கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வியானார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுடைய, ஒட்டுமொத்த விவசாயிகளினுடைய நம்பிக்கையை, பரிசைப் பெற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தென் தமிழ்நாட்டினுடைய முல்லை-பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி, அண்டை மாநிலங்களில், அனைத்துக் கட்சிகள் கூடி, பல கூட்டங்கள் நடத்தி, அனைத்துக் கட்சிகளும் கூடி, அரசாங்கமே நீதிமன்றத்தில்

[திரு. உ. தனியரசு] [2016 செப்டம்பர் 2 முறையிட்டபோதும்கூட தமிழ்நாடு அரசினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு வாதத்தை வைத்து, ஒரு வார்த்தையை வைத்து, ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டால், அதை மறுத்து தீர்ப்பு கூறுவதற்கு உலகத்தில் எந்த நீதிமன்றத்திற்கும் மனசாட்சி இல்லை, எந்த நீதிமன்றமுமேகூட மாற்ற முடியாத அளவிற்கு இயற்கையின் நீதியின்பால், சட்டத்தின் நீதியின்பால், மாநிலங்களுக்கிடையில் இருக்கின்ற இறையாண்மையின்பால், மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்ற உயர்ந்த ஜனநாயகவாதி. நீதியையும் சட்டத்தையும் மதித்து, நாட்டு மக்களை நேசிக்கின்ற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் 7 கோடிக்கும் மேல் இருக்கின்ற, ஒட்டுமொத்த மக்கள் சமுதாயத்தினுடைய ஒரு துண்டு நிலத்தையும் யாரும் அபகரித்துவிட முடியாது. அப்படி தாரை வார்த்த நிலத்தைக்கூட, கச்சத் தீவைக்கூட மீட்டெடுப்பதற்கான தீர்மானமும், உச்ச நீதிமன்றத்திலே வழக்கும் தொடுத்த தலைவி நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்றே காவேரி ஆற்றினுடைய உரிமையிலே, திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது வேறு எந்த கட்சியை சேர்ந்தவர்களோகூட அதற்காக முனைந்து, அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது பணியாற்றாமல் இருந்தபோதும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பாகுபாடு இல்லாமல், நியாயத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆற்றுநீர் உரிமையைப் பெற்றுத் தந்தார்கள். ஒரு சொட்டு நீரைக்கூட வீணாக்காமல், கேரளாவோ, ஆந்திராவோ அல்லது கர்நாடகாவோ, மத்திய அரசாங்கமே நினைத்தாலும், உச்ச நீதிமன்றத்தின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டு ஆற்றினுடைய உரிமையையும் பெற்றுத் தருவார், இந்த நிலத்தையும் பெற்றுத் தருவார். சிறுவாணி ஆற்றின் குறுக்கே அட்டப்பாடியில் அணை கட்ட முயற்சிக்கின்ற கேரள அரசின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த, இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தினை நான் மனதாரப் பாராட்டி, வழி மொழிந்து என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 2]

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், ஏன் இவ்வாறெல்லாம் உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள்? இவ்வாறெல்லாம் பேசாதீர்கள். அமைதியாக இருங்கள். தீர்மானத்தின்மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சட்டமன்ற நிகழ்வில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்காலச் சந்ததியினரின் குடிநீர் ஆதாரத்தை நிலைநிறுத்துவதற்காகவும், தமிழர்களுடைய குடிநீர்ப் பிரச்சினை உரிமையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்கின்ற ஆணித்தரமான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். சிறுவாணி, கோயம்புத்தூருக்கு மேற்கே, 37 கி.மீ. தூரத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. கோவை நகரின் முக்கிய குடிநீர் ஆதாரங்களில் ஒன்றாக அது இருக்கிறது. என்றைக்கும் 'கோவையின் குற்றாலம்' என்று அழைக்கக்கூடிய அது, இன்றைக்கு இவர்கள் செய்யக்கூடிய இந்த சதியின் பயனாக, 1956 ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர் தாவாச் சட்டம், சிறுவாணி நதிக்கும் பொருந்தும் என்று சொல்லப்படுகிறது. அந்த வகையில், 10–5–1969 அன்று கேரள அரசும், அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசும் 2.5 T.M.C. பாசனக் குடிநீர் திட்டத்திற்காக அன்றைக்கு ஓர் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து, 2007 ஆம் ஆண்டில் கேரள அரசு உச்ச நீதிமன்றத்திலும், காவேரி நடுவர் மன்றத்திலும் 6 T.M.C. தண்ணீர் வேண்டும், அதை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மனுவில் கோரியுள்ளது. அந்த நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான தமிழக அரசு, அன்றைக்கு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்மீதும், தமிழ்நாட்டிற்கு உள்ள சாதக பாதகங்களைக் கண்டறியும்படியும், கேரள மற்றும் கர்நாடக அரசுகள் ஒதுக்கீடு செய்த நீரின் அளவு அதிகம் எனக் கருதி, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனு வருகின்ற 18–10–2016 அன்று நீதிமன்றத்தில் வரவிருக்கிறது. இந்த நிலையில், இம்மாமன்றத்தில் இன்று வந்திருக்கக்கூடிய இந்த முக்கியமான தீர்மானத்தைப் பொறுத்தவரை, நடைபோட்ட காவேரிக்குத் தடை போட்டவர் பலருண்டு. ஆனால், மதி கொண்டு, சதி வென்று, காவேரியை வென்றெடுத்த காவேரித்

[திரு. சே. கருணாஸ்] [2016 செப்டம்பர் 2

தாய், தமிழர்களின் கருணைத் தாய், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காவேரியை அன்று தடுத்துக் காத்தது, கரிகாலன். காவேரியை இன்று நிலைத்துக் காத்துக்கொண்டிருப்பது, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடலின் நடுவே பயணம் போனால், குடிநீர் தருவது யாரோ என்பது அன்றைய ஒரு கேள்வியாக இருந்தது. அந்த நிலையை மாற்றி, இன்றைக்கு அம்மா குடிநீர்த் திட்டத்தைத் தந்து, அந்தக் குறையையும் போக்கியவர், மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழர்களின் உரிமைக்காகப் போராடுகின்ற வாழும் 'போராளி', (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி, முல்லைப் பெரியாறு, கச்சத் தீவு, பாலாறு, இன்றைக்கு சிறுவாணி. காவேரிக்காக சட்டப் போராட்டம் நடத்தினார் மாண்புமிகு அம்மா அவர்கள். அதில் மாபெரும் வெற்றி பெற்றார், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறுக்கு சட்டப் போராட்டம் நடத்தினார், மாண்புமிகு அம்மா அவர்கள். அதிலும் வெற்றி பெற்றார், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவுக்காக சட்டப் போராட்டம் நடத்துகிறார், மாண்புமிகு அம்மா அவர்கள். நாளை வெற்றி பெற்றே தீருவார் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதில் யாருக்கும் எந்த ஒரு சந்தேகமும் இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் பாலாறுக்கும் நடக்கும். பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை, அனைத்து கட்சிக் கூட்டம், அனைத்து கட்சிக் கூட்டம், அனைத்து கட்சிக் கூட்டம், என்கிறார்கள். காவேரிப் பிரச்சினைக்காக யார், யார் பேசினார்கள்? எத்தனை முறை பேசினார்கள்? எத்தனை முறை அனைத்து கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள்? என்ன பயன்? நீதிமன்றம் ஒன்றே தீர்வு என்று முடிவெடுத்தார், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தீர்க்கதரிசனம் வெற்றி பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சட்ட நடவடிக்கை வெற்றி பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் இழந்த ஜீவாதார உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 2] [திரு. சே. கருணாஸ்]

தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளைப் போராடி வெற்றி பெற்றுத் தந்துகொண்டிருக்கக்கூடியவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

தமிழகத்தின் ஜீவாதார உரிமையான சிறுவாணி உரிமையையும் பெற்றுத் தரப்போகிறவர் மாண்புமிகு அம்மா, அம்மா, அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்களெல்லாம் சும்மா, சும்மா, சும்மாதான் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தை என்னுடைய திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்த்திருக்கக்கூடிய முக்குலத்தோர் புலிப்படையின் சார்பாகவும் மனதார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஜீவாதார பிரச்சினையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள். இப்பேர்பட்ட தீர்மானம் ஏகோபித்த முறையிலே இந்த அவையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் வலியுறுத்தி இருக்கின்ற வகையிலே, சிறப்பான ஒரு தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்றது. எல்லா நிலைகளிலும் தமிழர்களுடைய வாழ்வாதாரத்தை நசுக்கக்கூடிய வகையில், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா அரசுகளும், மத்தியில் ஆட்சியிலே இருக்கக்கூடியவர்களும் நம்முடைய உணர்வுகளை எல்லாம் கொச்சைப்படுத்தக்கூடிய வகையில், நம் வாழ்வாதாரத்தை இழக்கக்கூடிய அளவிலே, ஒரு நடவடிக்கையை கண்டிக்கக்கூடிய வகையிலும், ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியிலே இருக்கின்றோம் என்பதை எடுத்துச்சொல்லக்கூடிய வகையிலும் ஒரு சிறப்புக்குரிய தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் பன்மாநில நதியாக இருக்கக்கூடிய சிறுவாணி நதி குறித்து தமிழக சட்டமன்றப் பேரவையில் தனித் தீர்மானம் இங்கே

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2016 செப்டம்பர் 2 முன்மொழியப்பட்டிருக்கின்றது. தமிழகத்தினுடைய பாதுகாப்புக்காக எல்லைப் பாதுகாப்பு வீரர்களும், மொழிப்போர் தியாகிகளும் எப்படி அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டார்களோ, அதனடிப்படையில் இப்போது நம்மை சுற்றியிருக்கக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், உரையை சுருக்கமாகப் பேசி முடியுங்கள். இன்றைக்கு கில்லட்டின் இருக்கிறது, 2–00 மணிக்குள் நான் அலுவலை முடிக்க வேண்டும். (குறுக்கீடு) தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு கில்லட்டின் நேரத்திற்குள் அலுவல்களை முடிக்க வேண்டும்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு ஒரு நிமிடம்கூட கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். நான் எதுவும் தவறாகச் சொல்லவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தவறாகச் சொல்லவில்லை, சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: சிறுவாணி நதி குறித்து தமிழக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்படக்கூடிய சிறப்புக்குரிய தனித் தீர்மானத்தை இந்திய தேர்தல் ஆணையத்தாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய மாநில அரசியல் கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம்கூட பேசவில்லை. மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் இரண்டு முறைதான் நான் பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். தேர்தல் ஆணையத்தாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய மாநில கட்சி. நான் எதுவும் தவறாகச் சொன்னேனா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் காலையிலே என்னிடம் கேட்டதற்கு, வரவேற்பதற்கு அனுமதி தருகிறேன் என்று சொன்னேன். தீர்மானத்தை வரவேற்று விட்டீர்கள், உட்காருங்கள். 2–00 மணிக்குள் நான் அலுவலை முடிக்க வேண்டும்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: இங்கே முன்மொழியப்பட்ட தனித் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே வரவேற்கின்றேன், வழிமொழிகின்றேன்.

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஒரு முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே முன்மொழிந்திருக்கிறார்கள். சிறுவாணி நதியில் அட்டப்பாடி என்ற இடத்திலே ஓர் அணையைக் கட்டுவதற்கு கேரள அரசு முயற்சி செய்கிறது. அவ்வாறு அந்த அணையைக் கட்டினால், கோயம்புத்தூர் மற்றும் அதற்கு அருகில் இருக்கக்கூடிய மாவட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை ஆரம்பக் கட்டப் பணியைத் துவக்குவதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. அந்த அனுமதியை மத்திய அரசு எவ்வாறு கொடுத்தது? ஏன் கொடுத்தது? என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சியாகிய நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு, இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் மிக, மிக முக்கியமானது. இதைப்போல, காவேரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்திலே ஓர் அணை, அதைப்போல பாலாற்றின் குறுக்கே ஓர் அணை என்று தமிழகம் தண்ணீரைப் பெறுவதிலே இவ்வாறு பல தடங்கல்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். அதிலே, நம்முடைய அரசு இன்றைக்கு நீதிமன்றத்தின் வழியாக ஒரு நல்ல முடிவைப் பெறலாம் என்று எண்ணுகிறார்கள். அதில் இன்னொன்றும் இருக்கிறது. ஏன் அந்த அரசு. . .*

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தீர்மானத்தை வரவேற்று, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *முடித்துவிடுகிறேன். சம்பந்தப்பட்ட அரசுகளுடன் பேசி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

[2016 செப்டம்பர் 2

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகதாது என்ற இடத்தில் காவேரியின் குறுக்கே அணை கட்ட வேண்டும் என்று முயற்சிப்பது மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் அரசு என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கொண்டு அவர் அதைப்பற்றி இங்கே பேசாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அதோடு முடியுங்கள்.

திரு. கரி. இராமசாமி: அதெல்லாம் முக்கியமான விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் சொல்வது உண்மைதான். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இது ஜீவாதார உரிமை. தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமை. தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உங்களுக்கு நிச்சயமாக உறுதுணையாக இருப்போம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில், நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வரவேற்கிறோம். இதுபோன்ற நடவடிக்கைகளை நீங்கள் தொடர்ந்து எடுக்க வேண்டும். எல்லா நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் எப்பொழுது அழைத்தாலும், எந்த நடவடிக்கைக்கு அழைத்தாலும் நாங்கள் வரத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வரவேண்டுமென்று தமிழக விவசாயிகளில் ஒரு பகுதியினரும், ஏன் பெரும் பகுதியினரும், தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசியல் கட்சியினரும்

2016 செப்டம்பர் 2] [திரு. துரைமுருகன்]

இதை வெளியிலே வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய கட்சிகள் எல்லாம் இதை அடிக்கடி வற்புறுத்தினார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்று அன்றைக்கு வலியுறுத்திப் பேசினார்கள். எது எப்படி இருந்தாலும், எல்லோருடைய அந்த அபிலாஷைகளையெல்லாம் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. இதிலே முக்கியமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், இங்கே நாம் அவர்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்களல்ல. கர்நாடகத்திலோ, கேரளத்திலோ அவர்கள் நமக்குத் தரும் தொல்லைகளை நம் தமிழகத்தில் இருக்கிற அரசு எதிர்த்துதான் தீரும். ஆனால், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் என்ற ஓர் அமைச்சகம் இருக்கிறது. அந்த அமைச்சகத்திலே ஒரு Expert Appraisal Committee இருக்கிறது. அவர்கள்தான் அந்த Standard terms of reference கொடுக்க வேண்டும். அதை அவர்கள் முதலில் மார்ச் மாதத்தில் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி, ஆகஸ்ட் மாதத்தில் மறுபடியும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எங்கேயோ தவறு மத்திய அரசிடம் நடந்திருக்கிறது என்று அர்த்தம். அதனால்தான் அதைக் கொடுக்கக் கூடாது என்று மறுபடியும் insist செய்திருக்கிறீர்கள். இருந்தாலும், இதோடு நாம் விட்டுவிடாமல் மறுபடியும் இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களும், வெளியில் இருக்கிறவர்களும் இதையொட்டி இன்னும் 2 கோரிக்கைகளைச் சொல்கிறார்கள். அதை நீங்கள் செய்வீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று இதுகுறித்து, மற்ற பிரச்சினைகள் குறித்து தேவை என்றால், கூட்டுங்கள்.

பிற்பகல் 1–30

இல்லாவிட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே போனால், இன்னும் வலிவும், பெருமையும் சேர்க்கும். மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலேயே ஒரு குழு

[திரு. துரைமுருகன்] [2016 செப்டம்பர் 2 மத்திய சர்க்காருக்குச் சென்று முறையிடலாம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், நமது சுற்றுவட்டாரங்களிலே, நெய்யாற்றங்கரையிலே ஆரம்பித்து கேரளாவிலே பல பிரச்சினைகள், காவேரியிலே ஆரம்பித்து பல பிரச்சினைகள் கர்நாடகத்தோடு, இப்போது பார்த்தால் பற்றாக்குறைக்கு பாலாற்றுப் பிரச்சினை. மத்திய சர்க்காரிலே இவற்றைக் கொண்டு போய், நம்முடைய எதிர்ப்பை வலுவோடு தெரிவிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றால் தமிழ்நாட்டுக்கு அது பெருமை, வலிமை. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முடியாவிட்டாலும், மாண்புமிகு நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அல்லது concerned Minister தலைமையிலோ எதிர்க்கட்சிகள் அடங்கிய குழுவை அழைத்துச் சென்று, மத்திய சர்க்காரிடத்திலே நாம் தெளிவாகச் சொல்ல வேண்டும். நாங்கள் எவ்வளவு உறுதியோடு இருந்தோம். இதற்குப் பிறகு எங்களையும் மீறி, நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். எங்களைக் கேட்டுக்கொண்டுதான் அவர்கள் எதையும் செய்ய வேண்டும் என்று நீங்கள் அறிவுறுத்தியும், பிறகு உங்களிடத்திலே இருக்கக்கூடிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் இப்படிச் செய்கிறதே, இது நியாயமா என்பதை மாண்புமிகு பிரதமர் வரையிலே நாம் தெரிவித்துவிட வேண்டும். அப்போதுதான், இந்தப் பிரச்சினையிலே, மத்திய சர்க்காரும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும், நமக்குள்ளே பல பிரச்சினைகள் இருந்தாலும்கூட, நாம் இதிலே ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதைக் காட்டுவதற்கு உதவும். இப்போதுகூட நமக்குள் ஆயிரம் சண்டை ஏற்படுகிறது. ஆனால், எப்படி இதே சண்டை கர்நாடகத்தில் வரவில்லையா என்றால், வருகிறது. அங்கே எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்றாகப் போய்விடுவார்கள். இங்கே நமக்கும்தான் வருகிறது. தயவுசெய்து நான் சொல்கிறேன், இந்த ஒரு பிரச்சினையில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அரசாங்கம் செய்கின்ற முடிவுக்கு, தமிழ்நாடு முழுவதும் உள்ள அத்தனை பேரும் ஒத்துழைக்கிறார்கள். எனவே, அத்தனை பேரையும் இணைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் சர்க்காருக்கு இருக்கிறது என்று சொல்லி, தீர்மானத்தை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். தமிழக விவசாய மக்களின் நலன் காத்திட்ட, நதிநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் குறிப்பாக, காவேரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற பன்மாநில நதிகளிலிருந்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீர்ப் பங்கினை உரிய வழியிலே பெற்றுத் தரும் நாடு போற்றும் ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பன்மாநில நதி சம்பந்தமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாரதப் பிரதமர், சம்பந்தப்பட்ட மாநில முதல்வர் மற்றும் மத்திய அரசின் செயலகம் ஆகியவற்றிற்கு கடிதம் எழுதப்பட்டும், பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து கோரிக்கை வைக்கப்பட்டும், அதற்கு தீர்வு ஏற்படாததால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு, அதில் வெற்றிகண்டு, சாதனை படைத்தவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் எவருமில்லை, இதை நாடறியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிலையில், அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்காக கேரள அரசு அணை ஒன்று கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருவதை நிறுத்தும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கேரள அரசுக்கு 13 கடிதங்கள் எழுதப்பட்டன. மத்திய நீர் ஆதாரத் துறை அமைச்சகத்திற்கு 7 கடிதங்கள் அனுப்பப்பட்டன. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்திட்ட நடவடிக்கையின்மூலம், விவசாய மக்களுடைய நன்மைகளைப் பாதுகாப்பதில் ஒப்பற்ற தலைவியாக விளங்குபவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் நலன் காக்க வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2016 செப்டம்பர் 2*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவும், பரிவும் கவரி வீச, கருணையும் தயவும் பதாகையாக, கடமையும், கண்ணியமும் வெண்கொற்றக் குடையாக, மக்களுக்கு அர்ப்பணித்த வாழ்வு செங்கோலாக, நியாயமும், நேர்மையும் கவசமாக, தவ வாழ்வு வாழ்ந்து வரும் தமிழகத்தைக் காத்து வரும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனையாக, மகத்தான தொடர் வெற்றி பெற்று 6 ஆவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக அரியணை ஏறி, அளப்பரிய சாதனைகளை தினம், தினம் தந்து கொண்டிருக்கக்கூடிய எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், வாக்களித்த மக்களின் கை விரல் மையின் ஈரம் காய்வதற்குள், தமிழக மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே தலைவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியைக் காத்த மாண்புமிகு அம்மா அவர்கள், முல்லைப் பெரியாறைக் காத்த மாண்புமிகு அம்மா அவர்கள், மீனவர்களைக் காத்த எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்றைக்கு சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட திட்டமிட்டுள்ளதற்கு எதிராக தனித் தீர்மானம் இயற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட மக்களின் நலன் காத்த அம்மா அவர்களுக்கு, கோவை மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சதி செய்து காவேரியைத் தடுத்தபோதும், மதி கொண்டு தடையை உடைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை, தமிழ் மண்ணில் ஜதி செய்ய மற்றொரு விதி செய்த, செயல் வீரமிக்கவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

தட்டும் ஒலி) குடகு விட்டு குதித்து வரும் காவேரியை அடகு வைத்த தவற்றை தன் அறிவால் சரி செய்து, மதியால் புது விதி செய்து தலைக் காவேரியை தமிழகம் அழைத்து வந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு பிரச்சினையிலும் முடிசூட்டியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் காவேரி படுகையில் கேரள மற்றும் கர்நாடக அரசுகள் எந்தத் திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என மத்திய அரசை வற்புறுத்தி, சிறப்புமிக்க தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அவையில் கொண்டு வந்துள்ளார்கள்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்னும் வள்ளுவத்தை, தண்ணீரில் மெய்ப்பித்த தாயுருவப் போராளி, மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொண்டு, சிறப்பான தீர்மானத்தை முன்மொழிந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே 'இல்லை' என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)